10 JUN 2012

சுருக்கம்

திட்டங்கள் – மாநிலத் திட்டம் – சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் – 2011–12–ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டது – 2011–12–ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியில் இருந்து சட்டமன்ற உறுப்பினர்கள் மடிக்கணினி(Laptop)/கணினி (Computer), பிரிண்டர் (Laser/Inkjet) மற்றும் அகண்ட அலைவரிசை இணையதள இணைப்பு வசதி (Broad Band Internet Connection) போன்றவற்றை வாங்கிக்கொள்ள அனுமதியளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி-1) துறை

63684/4
011507

அரசாணை (நிலை) எண்.3

நாள்: 25.01.2012.
தை 11 ,
திருவள்ளுவர் ஆண்டு 2043.
படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.134, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, நாள் 29.09.2006.
2. அரசாணை (நிலை) எண்.80, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி–1) துறை, நாள் 28.10.2011.
3. அரசுக் கடிதம் எண்.30108/மா அதி–1/2011–1, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 22.12.2011.
4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடித எண்.63654/2011/NEDM-2, நாள் 29.12.2011.

ஆணை:

படிக்கப்பட்டவை இரண்டில் உள்ள அரசாணையில் 2011–2012–ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்திடத் தேவையான ஆணைகள் மற்றும் விரிவான வழிகாட்டு நெறிமுறைகளுடன் வெளியிடப்பட்டன.

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 11.08.2011 அன்று 2011–2012–ஆம் ஆண்டைய திருத்திய வரவு, செலவுத் திட்டத்திற்கான பொது விவாதத்தின்போது,

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுக்கு மடிக்கணினி வாங்கி வழங்கக் கோரிய கோரிக்கையினை ஏற்று, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ஒரு மடிக் கணினி வாங்கிக் கொள்ளலாம் என் அறிவிப்பு செய்தார்கள்.

3. தமிழ்நாடு சட்டமன்ற பேரவைச் செயலாளர் 14.12.2011 நாளிட்ட தனது குறிப்பில், முந்தைய சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர்களால் வாங்கப்பட்ட கணினிகள் பழுது ஏற்பட்டு அவற்றை சரிசெய்ய இயலாத நிலையில் இருந்தாலோ அல்லது தற்போதைய தொழில்நுட்ப வசதிகளை உள்ளடக்கிய நிலையில் இல்லாமல் இருந்தாலோ, தற்போதைய உறுப்பினர்கள் விருப்பப்படின், தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து புதிதாக மடிக்கணினி வாங்கிக் கொள்ள ஏதுவாக உரிய ஆணைகள் வெளியிடுமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. படிக்கப்பட்டவை மூன்றில் காணப்படும் அரசு கடிதத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து புதியதாக ஒரு மடிக்கணினியை வாங்கிக் கொள்ளத் தேவையான கருத்துரு அனுப்புமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

5. படிக்கப்பட்டவை ஐந்தில் காணப்படும் தமது கடிதத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், படிக்கப்பட்டவை ஒன்றில் காணப்படும் அரசாணையில் 2006–07ம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அவர்களின் தேவைக்கேற்ப கணினி/மடிக்கணினி இணையதள வசதியுடன் மூன்று வருட உத்திரவாதத்துடன் வாங்கி வழங்கப்பட்டது என்றும், அவ்வாறு வாங்கப்பட்ட கணினிகள்/மடிக்கணினிகள் யாவும், திரும்பப் பெறப்படவில்லை எனவும், மேலும் கணினிகளின் ஆயுட்காலம் அதிகபட்சம் 3 ஆண்டுகள் என்பதாலும் தற்போது ஐந்து ஆண்டுகள் முடிவுற்ற நிலையில் மேற்கண்டவாறு வாங்கி வழங்கப்பட்ட கணினி/மடிக்கணினி உபயோகப்படுத்தக்கூடிய நிலையில் நல்ல முறையில் இருப்பதற்கான சாத்தியம் இல்லை என்றும் தெரிவித்துள்ளார். மேலும், 11.8.2011 அன்று நடைபெற்ற 2011–12ம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவுத் திட்டம் பொது விவாதத்தின்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையினை ஏற்று சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து மடிக்கணினி வாங்கிக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்ட அறிவிப்பின்படி நடப்பாண்டிற்கு 2011–12 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியில் வரையறுக்கப்படாத நிதி ஒதுக்கீட்டிலிருந்து அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களின் தேவைக்கேற்ப மடிக்கணினி/கணினி, பிரிண்டர் மற்றும் அகண்ட அலைவரிசை இணையதள இணைப்பு வசதி ஆகியவற்றை பெற்றுக்கொள்ள மாவட்ட ஆட்சியர்/சென்னை மாநகராட்சி ஆணையர் உரிய அனுமதி வழங்கலாம் என்றும், கணினி கொள்முதல் செய்ய உரிய விதிமுறைகளைப் பின்பற்றி வாங்கி வழங்கிட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கிடலாம் என்றும், கணினி வாங்கப்படும்போது நிறுவனங்களால் வழங்கப்படும் வாரண்டி காலம் தவிர அவற்றின் பராமரிப்பு மற்றும் தொடர் செலவினங்களை சம்மந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

6. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் செயற்குறிப்பினை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்றுக்கொள்ளலாம் என முடிவு செய்துள்ளது. அதன்படி, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், 2011–12–ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியின், வரையறுக்கப்படாத நிதி ஒதுக்கீட்டிலிருந்து தங்களின் தேவைக்கேற்ப தலா ஒரு புதிய மடிக்கணினி (Laptop) / கணினி (Computer), பிரிண்டர் (Laser/Ink jet) மற்றும் அகண்ட அலைவரிசை இணையதள இணைப்பு வசதி (Broad Band Internet Connection) ஆகியவற்றை ஒருமுறை மட்டும் வாங்கிக்கொள்ள தேவையான அனுமதி அளிக்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருக்கு அதிகாரம் அளித்து அரசு ஆணையிடுகிறது. மேலும், கணினி கொள்முதல் செய்ய உரிய வழிமுறைகளை பின்பற்றி வாங்கி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கிட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு/சென்னை மாநகராட்சி ஆணையருக்கு அதிகாரம் அளித்தும், இவ்வாறு கணினி வாங்கப்படும் போது தொடர்புடைய நிறுவனங்களால் வழங்கப்படும் வாரண்டிகாலம் தவிர அவற்றின் பராமரிப்பு மற்றும் தொடர் செலவினங்களை சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அரசு ஆணையிடுகிறது.

7. இந்த அரசாணை நிதித் துறையின் அ.சா.எண். 232/FSP/2012, நாள் 21.01.2012–ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நா.ச. பழனியப்பன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள் (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை –15 வழியாக)
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
செயலாளர், சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை–9.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக)
அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்கள் (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் வாயிலாக).
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை–3.
பேரூராட்சிகள் இயக்குநர், சென்னை–108.
ஆணையர், கருவூலக் கணக்கு, சென்னை–15.
உறுப்பினர் – செயலாளர், மாநில திட்டக் குழு, சென்னை–5.
இயக்குநர், ஊராட்சி நிதி தணிக்கை துறை, சென்னை–108.
மாநில தலைமை கணக்காயர், சென்னை (18/35).
சம்பளக் கணக்கு அலுவலர் (தலைமைச் செயலகம்), சென்னை–9.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–5.

சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–1.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.

நகல்

கூடுதல் தலைமைச் செயலாளர்/மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர் – I, சென்னை–9.
மாண்புமிகு நிதி அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை– 9.
மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி அமைச்சரின் முதுநிலை உதவியாளர், சென்னை–9.
தலைமைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை– 9.
நிதி (வரவு–செலவு– I / வரவு–செலவு– II / ஊ.வ) துறை, சென்னை– 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சி. [signature]
பிரிவு அலுவலர்
நிக